සමාජ සවිබලගැන්වීම හා සුභසාධන අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

4වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4வதுமாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
4th floor, Sethsiripaya ,Battaramulla

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Divineguma Development**

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/MF/05/01

ඔබේ අංකය / உமது இல / Your No: ..............................

දිනය / திகதி / Date: 2016/03/28

**வாழ்வின் எழுச்சி வங்கி சுற்றுநிருப இலக்கம் - 2016/03**

**வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர்கட்கும்.**

## <u>"எமது பாரம்பரியத்தை பேணுவோம் - சிக்கனம் காப்போம்"</u>
## <u>சிங்கள / தமிழ் புத்தாண்டு விழாவுக்கு இணைவாக சேமிப்பு மேம்பாடு மற்றும் புத்தாண்டு விழா வேலைத்திட்டம் - 2016</u>

**1. அறிமுகம் :-**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச்சங்கங்கள் சிங்கள /தமிழ் புதுவருடத்தினை வங்கியின் வாடிக்கையாளர்கள் உட்பட அனைத்து மக்களுடனும் இணைந்து கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பினால் சிங்கள /தமிழ் பழக்க சம்பிரதாயங்களுடன் கூடிய கிராமிய விளையாட்டுகளுக்கு முதலிடம் வழங்கி "எமது பாரம்பரியத்தைப் பேணுவோம் - சிக்கனம் காப்போம்" எனும் தொனிப்பொருளில் வேலைத்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2. செயற்படுத்தவுள்ள வேலைத்திட்டங்கள் :-**

I. சிங்கள / தமிழ் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம்.

II. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக புத்தாண்டு கொண்டாட்டங்களை நடாத்துதல்.

**3. சிங்கள / தமிழ் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம்.**

3.1. 2016 ஆம் ஆண்டின் சிங்கள / தமிழ் புத்தாண்டின் பொருட்டான கொடுக்கல் வாங்கல் மரபுகளை இம்முறை மிகவும் சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கு நாடுமுழுவதும் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளையும் தயார்படுத்துவோம். இம் மரபுகளின் பொருட்டு அனைத்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளும் 2016.04.14 ஆம் திகதி திறந்து கொடுக்கல் வாங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

3.2. புத்தாண்டின் பொருட்டு 2016.04.14 ஆம் திகதி வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் அனைத்து வாடிக்கையாளர்கட்கும் சிங்கள / தமிழ் பாரம்பரியத்துக்கமைய 10 ரூபா நாணயம் வெற்றிலையில் வைத்து அன்பளிப்பாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ் அன்பளிப்பு வங்கிக்கு வந்து பணத்தினை வைப்புச் செய்கின்ற வாடிக்கையாளர்கட்கு மட்டுமே வழங்கப்படல் வேண்டும். இச் செயற்பாட்டுக்கு முன் ஆயத்தங்களை செய்து கொள்ள வேண்டுவதுடன், இதற்கு ஏற்படும் செலவுகள் அனைத்தும் **செலவுக் கணக்கு – வங்கி மேம்பாட்டு நடவடிக்கைகள் கணக்கில்** பற்று வைக்கப்படல் வேண்டும்.

අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
Tel:011-2873802/2872202
Fax-011-2889002
dg@divineguma.gov.lk

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල්
மேலதிகபணிப்பாளர்தலைமையதிபதி
Additional DirectorGeneral
011-2871672
011-2871672
adg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (පාලන)
பணிப்பாளர் (நிர்வாகம்)
Director (Administration)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk

ප්‍රධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2887280
**011-2887722**(Hotline)
Isuri-desktop-Anura-Circular

3.3. 2016.04.14 ஆம் திகதி வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளை திறந்து கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு மேலதிகமாக சேமிப்பு மேம்படுத்தல் வேலைத்திட்டத்தினை ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 20 வரை இவ்விரண்டு தினங்களும் அடங்கலாக வாரம் முழுவதும் அனைத்துக் கிராமசேவகர் பிரிவுகளிலும் செயற்படுத்தப்படல் வேண்டும்.

3.4. இதற்கமைய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் அதிகாரப்பிரதேசத்திற்கு உட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் கடமையாற்றும் சகல வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கட்கும் இலக்குகள் வழங்கப்படல்வேண்டும். இதற்கமைய ஒரு பிரிவில் அனைத்துக் கணக்குகளுக்குமான வைப்பாக 80,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை திரட்டுவதற்கு இலக்கினை வழங்க வேண்டும்.

3.5. சிங்கள / தமிழ் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி ஒன்று தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து வைப்புக்களின் பொருட்டும் சேமிப்பு வாரத்தினுள் 1 மில்லியன் ரூபாவினை வைப்பாக திரட்டுதல் வேண்டும். (கள வைப்புக்கான இலக்குகள் அடங்கலாக)

3.6. இச் சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களின் நிர்வாக உறுப்பினர்களும் நேரடியான பங்களிப்புக்களை செய்ய வேண்டும்.

3.7. சேமிப்பு மேன்பாட்டு வாரத்தில் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு வைப்புச் செய்யப்படும் பணம் 1 வருடத்திற்கு வங்கியின் வைப்பாக தேக்கிவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும்.

3.8. 2016 சிங்கள / தமிழ் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கட்கு நினைவுப் பரிசு வழங்குதல் வேண்டும். இதற்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள பிரதான காரியாலயத்தின் கேள்விச் சபை தீர்மானத்துக்கு அமைய பொருத்தமான நிறுவனம் / நிறுவனங்களை தெரிவு செய்து வங்கிகளுக்கு எதிர்காலத்தில் அறிவிக்கும். இதன் பிரகாரம் நாட்டின் சகல வங்கிகளும் அந்தந்த வைப்புத் தொகைகட்கு அமைய பொருத்தமான ஒரே வகையான நினைவுப் பரிசினை அடையாளப்படுத்தி அனுப்பி வைப்பதை தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன். எனவே வங்கியால் விலை மனு கோரல் நடவடிக்கைகளின் ஊடாக கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 4. வங்கி வலய மட்டத்தில் புத்தாண்டு விழாக்கள் நடாத்துதல்.

4.1 நாடு முழுவதும் அமைந்துள்ள அனைத்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளும் தமது வலயத்தினுள் ஒரு புத்தாண்டு விழாவினை ஏற்பாடு செய்து நடாத்த வேண்டியது கட்டாயமாகும்.

4.2 புத்தாண்டுக் கொண்டாட்டம் 2016.04.24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் ஒரே நாளில் 1074 புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.3 பந்தி இலக்கம் 4.2ல் குறிப்பிட்டதன் பிரகாரம், விசேட காரணங்களின் நிமிர்த்தம் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடாத்த முடியாமல் போனால் மாத்திரம் அடுத்துவரும் வாரத்தில் வாரஇறுதி நாள் ஒன்றை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். இதற்கான முன் அனுமதியினை மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கும் தெரியப்படுத்தல் கட்டாயமாகும். ( புத்தாண்டுச் செலவினங்களை மீளளிப்புச் செய்யும் போது உரிய திகதி மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டதாக விசேட குறிப்பினை மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் இடல் வேண்டும்.)

4.4 கிராமிய விளையாட்டுகளுக்கு முன்னுரிமை வழங்கி வங்கிச் செயற்பாடுகள் வளர்ச்சியடையக் கூடிய வகையில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறல் வேண்டும்.

4.5 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியினால் ஒழுங்கு செய்யப்படும் புத்தாண்டு விழாவுக்கு அவசியமான செலவினங்களை சிக்கனப்படுத்திக் கொள்வதுடன் இதற்காக கூடியது 40,000/=ரூபாவினை செலவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது, இச் செலவில் 15,000/=ரூபா சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவினால் குறித்த வங்கிக்கு மீளளிப்பு செய்யப்படுவதுடன், மீதமான செலவுத் தொகை வங்கி நிதியத்தில் இருந்து செலவு செய்யப்படல் வேண்டும். அதற்கான கணக்கு பதிவுகளை கீழ்வருமாறு மேற்கொள்ள வேண்டும்.

பற்று - வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீளளிப்பு செய்யப்படவேண்டிய நிதியக் கணக்கு. (சமுதாய அடிப்படை வங்கிப்பிரிவால் மீளளிப்பு செய்ய வேண்டிய தொகை)

பற்று - செலவுக் கணக்கு – விழா நடவடிக்கைகள் (வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை)

வரவு–நடைமுறைக் கணக்கு / காசுக் கணக்கு.

4.6 வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள சேமிப்பு இலக்கு அல்லது புத்தாண்டு விழா நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி போன்ற விடயங்களுக்கான நிபந்தனைகளில் ஒன்றை அல்லது பலவற்றை மீறுகின்ற அல்லது பின்பற்றாத வங்கிகட்கு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிப்பிரிவால் வழங்குவதற்கு தீர்மானத்துள்ள 15,000/= ரூபாவினை வழங்காமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான நிலமைகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் செலவு செய்யக்கூடிய ஆகக்கூடிய தொகை 25,000/=ரூபாவாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

4.7 புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடாத்தப்பட்டதன் பின் மே மாதம் 10ஆம் திகதிக்கு முன்பு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய நிதி சம்மந்தமான தகவல்களை மாதிரிப்படிவம் 04ற்கு அமைய பூரணப்படுத்தி பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்ட வாழ்வின் எழுச்சி குறுநிதி விடயப்பொறுப்பு முகாமையாளரினால் மாவட்டத்தின் சகல வங்கிகிளில் இருந்தும் கோரப்படும் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய நிதி சம்மந்தமான அறிக்கையினை இணைப்பு 05ல் தயாரித்து 2016.05.31க்கு முன்னர் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு அனுப்பிவைக்க வேண்டியது கட்டாயமாகும்.இதற்கு பின்னர் செய்யப்படும் கோரிக்கைகட்கு நிதி மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

4.8 புத்தாண்டு விழா நடவடிக்கையின் பொருட்டு வெளி அமைப்புக்கள் / நபர்களின் உதவிகள், உபகாரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அது தொடர்பான கோவைகளை பாரமரிக்குமாறும் வேண்டப்படுகின்றீர்.

## 5. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் செயற்பொறுப்புக்கள்.

5.1 தேசிய மற்றும் மாவட்ட இலக்கினை நோக்கிய வேலைத்திட்டத்தினை முன்னோக்கிச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு வங்கிச் சங்கத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். (தங்களது வங்கிச் சங்க அதிகார பிரதேசத்தினுள் சகல கிராம சேவகர் பிரிவுகளினதும் இலக்கினை ஒன்று சேர்த்து வங்கிச் சங்கத்தின் இலக்கினை தயார் செய்து கொள்ள வேண்டும். இங்கு இலக்கினை பூர்த்தி செய்யும் வங்கிச் சங்கம் மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் பராட்டுதலுக்கு உட்படுத்திப்படவுள்ளது.

5.2 வங்கிச் சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்துக்குரிய சகல வங்கிகளினதும் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல், சேமிப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் புத்தாண்டு விழா நடாத்துதல் போன்றவற்றுக்கு வங்கிச் சங்க முகாமையாளர் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புக்களை வழங்க வேண்டும்.

5.3 வேலைத்திட்டதின் முன்னேற்றத்தினை வழங்கப்பட்டுள்ள அறிவுரைக்கமைய மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5.4 புத்தாண்டு விழாவுக்காக நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதுடன் சேமிப்பு மேம்படுத்தல் வேலைத்திட்டம் பற்றிய அறிவூட்டல்கள் சமுதாய கட்டமைப்புக்களின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 6. மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பிரிவின் செயற் பொறுப்புகள்.

6.1 மாவட்டத்தின் அனைத்து சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களுக்கு இச் சுற்று சுற்றுநிருப ஆலோசனைகட்கு அமைய உரிய வேலைத்திட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இலக்கினை அடைந்து கொள்வதற்கு தேவையான அறிவூட்டல்களை மேற்கொள்ளவேண்டும்.

6.2 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்துக்கு அமைய கிராமசேவகர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கினை அடிப்படையாக கொண்டு மாவட்டத்தின் சகல கிராம சேவகர் பிரிவுகளினதும் இலக்கினை தயார் செய்து கொள்ளல்.

6.3 புத்தாண்டு கொண்டாட்டத்தினை குறித்த தினம் தவிர்ந்த வேறு ஒரு தினத்தில் கொண்டாட முன் வைக்கப்படும் கோரிக்கைக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் அது தொடர்பாக முன்வைக்கும் காரணங்களை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இருந்தால் மாத்திரம் அதற்கு அனுமதி வழங்குவதுடன், அது தொடர்பாக சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு அறிவித்தல் வேண்டும்.

6.4 மாவட்டத்தின் சமுதாய அடிப்படை வங்கிகளால் புத்தாண்டு விழாக்கள் ஏற்பாடு செய்துள்ள இடங்கள் தொடர்பான தகவல்களை 2016.04.19 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி நிதிப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல்.

6.5 புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு விழாக்களுக்காக மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரிவு உத்தியோகத்தர்களின் பங்குபற்றல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6.6 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலக்கினை பூர்ணப்படுத்திய மற்றும் கூடிய வைப்புக்களை சேகரித்த உத்தியோகத்தர்களை பாராட்டுதல்.

6.7 முன்னேற்ற அறிக்கைகளை உரிய முறையில் பெற்று அதனை வங்கிப் பிரிவுக்கு அனுப்பிவைத்தல்.

6.8 தேசிய மட்டத்திலான பாராட்டு விழாவின் போது வழங்கப்பட்ட இலக்கினை நல்ல முறையில் பூர்த்தி செய்த மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பிரிவும் பாராட்டுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

## 7. முன்னேற்ற அறிக்கை மற்றும் மீளளிப்புக்கான நிதிகோரலும்.

7.1

| அறிக்கை இட வேண்டிய வங்கி / பிரிவு | அறிக்கை அனுப்ப வேண்டிய திகதி | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் | அறிக்கை ஒப்படைக்க வங்கி / பிரிவு | அறிக்கை இடுவதற்கு பாவிக்க வேண்டிய படிவம் |
|---|---|---|---|---|
| **சேமிப்பு திரட்டலின் முன்னேற்றம்**<br>வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி | 2016.04.27 | வங்கி முகாமையாளர் | வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிச் சங்கத்திற்கு | இணைப்பு 01<br>இணைப்பு 06 |
| வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | 2016.05.05 | வங்கிச்சங்க முகாமையாளர் | வாழ்வின் எழுச்சி மாவட்ட அலகிற்கு | இணைப்பு 02<br>இணைப்பு 06 |
| வாழ்வின் எழுச்சி மாவட்ட அலகு | 2016.05.18 | மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் | சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு | இணைப்பு 03<br>இணைப்பு 06 |
| **புத்தாண்டு செலவு மீளளிப்புக்கான கோரிக்கை**<br>வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி | 2016.05.10 | வங்கி முகாமையாளர் | வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிச் சங்கத்திற்கு | இணைப்பு 04 |
| வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச சங்கம் | 2016.05.17 | வங்கிச்சங்க முகாமையாளர் | வாழ்வின் எழுச்சி மாவட்ட அலகிற்கு | இணைப்பு 04 |
| வாழ்வின் எழுச்சி மாவட்ட அலகு | 2016.05.31 | மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் | சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவுக்கு | இணைப்பு 05 |

7.2 புத்தாண்டு விழாச் செலவுகள் மீளளிப்புச் செய்வதற்கு 2016.05.31 வரை காலம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னர் வங்கிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு நிதி வழங்கப்படமாட்டாது.

## 8. உத்தியோகத்தர் பராட்டும் நற்சான்றிதழ் வழங்கலும்

8.1 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினால் வங்கிகளின் அதிகாரப் பிரதேசத்தின் கிராம சேவகர் பிரிவுகளில் தனது இலக்கினை தாண்டி சேமிப்புக்களை திரட்டிய உத்தியோகத்தர் 10 பேரை தெரிவு செய்து அவர்கட்கு பிரதேச செயலாளரின் வழிகாட்டலுக்கு அமைய நினைவுச் சின்னம் மற்றும் நற்/ சான்றிதழ்கள் வழங்கல், மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான சேமிப்பு தொகையினை சேகரித்த வங்கியின் முகாமையாளர் உட்பட பணிக்குழுவினை பாராட்டி நற்சான்றிதழும் வழங்கப்படும்

8.2 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தால் இன் நற்சான்றிதல் வழங்கப்படும் பணிகள் மேற் கொள்ளப்படுவதுடன் இதற்காக 5,000/=ரூபா விற்கு மேற்படாத தொகையினை வங்கிச்சங்க நிதியில் இருந்து செலவிடுவதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது. செலவிடப்படும் தொகை செலவுக் கணக்கு – விழா நடவடிக்கைகள் கணக்கில் பற்று வைக்கவும்.

8.3 மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரிவினால் மாவட்டத்தில் இலக்கினை தாண்டி கூடுதாலான சேமிப்பினை ஓன்றுசேர்த்த வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் 03னைத் தெரிவு செய்து அந்த வங்கிச் சங்க முகாமையாளர்,வங்கிச்சங்க பணிக்குழுவினருக்கான சான்றிதழ்களை வழங்க வேண்டும்.

8.4 மாவட்ட மட்டத்தில் சேமிப்பு மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் கூடுதலான சேமிப்புத் தொகையினை சேகரித்த மற்றும் அதற்காக பாரிய முயற்சிகளை மேற் கொண்ட வங்கி / களஉத்தியோகத்தர்களை பாராட்டுதல் வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் வங்கிகள் மற்றும் களப்பிரிவுகளின் எண்ணிக்கை என்பன வேறுபடுவதன் காரணத்தால் பாராட்டப்பட வேண்டிய களஉத்தியோகத்தர்கள், வங்கிகளின் எண்ணிக்கைகள் மற்றும் பாராட்டு விழா ஏற்பாடுகளுக்கு வழங்கப்படும் நிதியின் அளவும் என்பன கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் அமைவதுடன் இதற்கான நிதி வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிப் பிரிவினால் வழங்கப்படவுள்ளது.

| மாவட்டத்தில் அமைந்துள்ள வங்கிகளின் எண்ணிக்கை | பாராட்டப்பட வேண்டிய | | வழங்கப்படும் நிதி (ரூபா) |
|---|---|---|---|
| | கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | வங்கிகளின் எண்ணிக்கை | |
| 50தை விட குறைவு | 10 | 10 | 50,000 |
| 51 – 100 க்கு குறைவு | 12 | 12 | 75,000 |
| 101க்கு மேல் | 15 | 15 | 100,000 |

8.5 2016 ஆம் ஆண்டுக்கான சிங்கள / தமிழ் புதுவருட சேமிப்பு மேம்பாட்டின் பொருட்டு சேமிப்பினை திரட்டுவதற்கான இலக்கினை அடைந்து கொள்வதற்கு வாழ்வின் எழுச்சி நலன் உதவிப் பணத்தினை அல்லது வேறு கொடுப்பனவுகளில் ஒரு பகுதியினை சேமிப்பாக வைப்புச் செய்யும் படி நலனுதவி பெறுவோரை அல்லது பயனாளிகளை கட்டாயப்படுத்தியமை நிருபிக்கப்படும் களஉத்தியோகத்தர்கள் அல்லது வங்கி பாராட்டுதல் வழங்கும் நடவடிக்கைகளில் இருந்து பூரணமாக விலக்கி வைக்கப்படும்.

**9. 2016.04.14 ஆம் திகதி விசேட கடமையில் ஈடுபடுவதனால் வங்கிப் பணிக் குழுவினருக்கு மாத்திரம் அன்றைய தினம் ஒரு நாள் சம்பளம் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்குன்றோம்.**

**10. விசேட விடயங்கள்.**

10.1 சேமிப்பு வாரத்தினுள் களஉத்தியோகத்தர்கள் சேகரிக்கும் வைப்புத் தொகையினை 2016.04.22ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் ஒப்படைக்க வேண்டும். அதற்கு பின்னர் வங்கியில் ஒப்படைக்கப்படும் தொகை இலக்கு பூர்த்தி செய்தல் மற்றும் பாராட்டுதல் நடவடிக்கைகட்கு தகுதியற்றதாக கருதப்படும்.

10.2 2016 சேமிப்பு மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் சேமிப்பு கணக்குகளுக்கான வகைப்படுத்தல்கள் எதுவும் இன்றி வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளில் செயற்படுத்தப்படும் அனைத்து வைப்புக் கணக்குகளுக்கும் வைப்புகளை திரட்ட முடியும் என்பதையும் கருத்திற் கொள்ளவும்.

10.3 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வங்கியின் சகல வாடிக்கையாளர்களையும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வருமாறு அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் சுற்றுநிருப ஆலோசணைகளில் கூறப்பட்டுள்ள இலக்கினை அடைந்து கொள்வதற்காக வாடிக்கையாளர்களை வற்புறுத்தாமல் கடந்த காலங்களில் இடம்பெற்ற நட்புரீதியான சேமிப்பு மேம்பாட்டின் முக்கியத்துவத்தினை நினைவூட்டுவதுடன். அம் முக்கியத்துவத்தினை இம் முறையும் அதிகமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றோம்.

சந்திரா விக்கிரமசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்

D.A. சுனந்தா பியசீலி
பணிப்பாளர் (குறுநிதி)

பிரதிகள் :-

01. செயலாளர், சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக
02. சகல மாவட்ட செயலாளர்கட்கும் - தகவலுக்காக
03. சகல பிரதேச செயலாளர்கட்கும் - தகவலுக்காக
04. சகல மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்கட்கும் - தகவலுக்காக
05. பிரதான உள்ளக கணக்காய்வாளர், திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் - தகவலுக்காக

தமிழாக்கம் - ஐ .அலியார்

**இணைப்பு – 01**

## புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரித்த வைப்புகளின் முன்னேற்றம் - 2016

01. புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களின் முன்னேற்றம்.(2016.04.14ல் வங்கியின் சேமிப்பு)

| கணக்கின் வகை | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

02. வாழ்வின் எழுச்சி களஉத்தியோகத்தர்களினால் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரித்த வைப்புக்கள் முன்னேற்றம்

| பிரிவு | பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தரின் பெயர் | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| மொத்தம் | | | |

தயாரித்தவர்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

முகாமையாளர் உறுதிப்படுத்தல்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

இணைப்பு – 02

**புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுன் சேகரித்த வைப்புகளின் முன்னேற்றம் - 2016**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம் : ……………………………………..

01. புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு முன்னேற்றம்.

| வங்கி | புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் வேளையில் 2014.04.14இல் வைப்புகளின் முன்னேற்றம் | | புத்தாண்டு சேமிப்பு வாரத்தினுள் வைப்புகளின் முன்னேற்றம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா. | கொடுக்கல் வாங்கல் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா. | கொடுக்கல் வாங்கல் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா. |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

02. வாழ்வின் எழுச்சி கள உத்தியோகத்தரினால் புத்தாண்டுச் சேமிப்பு வாரத்தினுள் சேகரித்த சேமிப்புகளின் முன்னேற்றம்.

| பிரிவு | பிரிவு உத்தியோகத்தரின் பெயர் | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| மொத்தம் | | | |

தயாரித்தவர்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

முகாமையாளர் உறுதிப்படுத்தல்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

இணைப்பு – 03

**புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரிக்கப்பட்ட சேமிப்புக்களின் முன்னேற்றம் - 2016**

மாவட்டம்: …………………………………..

01. புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் புத்தாண்டுச் சேமிப்பு மேம்பாட்டு முன்னேற்றம்.

| வங்கி | புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் வேளையில் 2016.04.14 திகதியின் வைப்புகளின் முன்னேற்றம் | | புத்தாண்டு சேமிப்பு வாரத்தினுள் வைப்புகளின் முன்னேற்றம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | கொடுக்கல் வாங்கல் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா. | கொடுக்கல் வாங்கல் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா. | கொடுக்கல் வாங்கல் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா. |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

02. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி கள உத்தியோகத்தர்கள் புத்தாண்டு சேமிப்பு மேம்பாட்டு வாரத்தினுள் சேகரித்த வைப்புகளின் முன்னேற்றம் - 2016 (மாவட்டத்தினுள் அதிகூடிய சேமிப்பினை சேகரித்த உத்தியோகத்தர்களின் 25 பேர் மாத்திரம்)

| பிரிவு | பிரிவு உத்தியோகத்தரின் பெயர் | கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சேகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| மொத்தம் | | | |

தயாரித்தவர்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

முகாமையாளர் உறுதிப்படுத்தல்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

**இணைப்பு – 04**

………………..

2016…………..

மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்,

மாவட்ட செயலகம்,

…………………….

**<u>புத்தாண்டு கொண்டாட்டம் நடாத்தல் மற்றும் மீள்நிதியீட்டம் கோரல்</u>**

……………………. சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம்.

| வங்கியின் பெயர் | புத்தாண்டு விழா நடை பெற்ற திகதி | சேகரித்த மொத்த வைப்புத் தொகை | மேற்கொண்ட மொத்த செலவு | மீள் நிதியீட்டத்துக்கு கோரும் தொகை | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தயாரித்தவர்

பெயர்:-

பதவி:-

கையொப்பம்:-

திகதி:-

வங்கி முகாமையார் /சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர்

பெயர்:-

கையொப்பம்:-

திகதி:-

பிரதேச செயலாளரின் சிபார்சு

கையொப்பம்:

திகதி:

**இணைப்பு – 05**

வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்,

மாவட்ட செயலகம்,

………………………………

2016…………………………..

பணிப்பாளர்,

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிப்பிரிவு,

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்.

**<u>புத்தாண்டு விழா நடாத்தலும் மற்றும் நிதி மீளளிப்பு கோரலும் - 2016</u>**

| தொ. இல | வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி | புத்தாண்டு விழா நடைபெற்ற திகதி | சேகரித்த தொகை (ரூபா) | ஏற்பட்ட மொத்த செலவு (ரூபா) | மீளளிப்புக்கு கோரும் தொகை (ரூபா) | வேறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

தயாரித்தவர்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

உறுதிப்படுத்தல் (மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்)

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

**இணைப்பு – 06**

**சிங்கள / தமிழ் புத்தாண்டு சேமிப்பு சேகரிப்பு கணக்குகள் தொடர்பான பகுப்பாய்வு – 2016**

| வங்கியின் பெயர் | வைப்புத் தொகையின் பிரகாரம் கணக்கப் பகுப்பாய்வு | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.999 க்கு கீழ் வைப்பு செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா. 1000க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா 5000க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா 10000க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா 25000க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா 50000க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | ரூபா 100000க்கு மேல் வைப்புச் செய்த கணக்குகளின் எண்ணிக்கை | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

தயாரித்தவர்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

உறுதிப்படுத்தல்

பெயர் :-

ஒப்பம் :-

திகதி :-

**பதவி முத்திரை இடவும்**